பக்கங்கள்:-13

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | ஆடி 20 | சனிக்கிழமை | 05.08.2023 | அதிர்வு 04

## மின் கட்டணம் மீண்டும் உயரும்

மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டு சில வாரங்களேயாகும் நிலையில், மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிக ரிப்பதற்கு இலங்கை மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக் 02



# வடக்கு, கிழக்கிலாவது மாகாணத் தேர்தலை நடத்தச் சொல்லுங்கள்!

## இந்தியாவிடம் மனோ கணேசன் வலியுறுத்து

வடக்கு, கிழக்கிலாவது முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்து மாறு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது. 02

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்த டில்லியின் அழுத்தம் வேண்டும்!

## தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரிக்கை

கொழும்பு,ஓகஸ்ட் 05

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசுக்கு இந் தியா அழுத்தம் பிரயோ கிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியு றுத்தியுள்ளது.

மனோ கணேசன் தலை மையிலான தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து பேசப் பட்டது எனவும், 13 ஐ முழுமை யாக அமுல்படுத்த இந்தியா தலையிட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது என வும் மலையக மக்கள் முன்ன ணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ.இரா தாகிருஷ்ணன் தெரிவித்தார்.

# ஜனாதிபதி பதவிக்கு சஜித் சரிபட்டு வரார்!

## விக்கியின் கருத்து இது

- எஸ்.நிதர்ஷன் -

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 05**

**ஜனாதிபதி வேலைக்கு சஜித் பிரேமதாஸ சரிவரமாட் டார் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக் கினேஸ்வரன் தெரிவித்தார்.** 02

# "13" சபைக்கு வரட்டும் அப்போது பார்க்கலாம்

## அம்பாறையில் பிரதமர் பதில்



அம்பாறை,ஓக.05

நாடாளுமன்றத்துக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை விவாதத் துக்கு கொண்டுவரட்டும். அதன்போது பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆவது திருத்தச் சட் டத்தை 02

# கிழக்கில் அரச எம்.பிக்களின் ஊழல்கள் ஆவணம் பிரதமரிடம் நேரில் கையளிப்பு

## சாணக்கியன் எம்.பி. ஒப்படைப்பு



மட்டக்களப்பு,ஓக.05

கிழக்கில் அரச சார் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டு ஆவணங்களை நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த பிரத மர் தினேஷ் 02



## இரகசியம்

2005 ஜனாதிபதி தேர் தலை ஒட்டி நடைபெற்ற விடயங்களை கடந்த இரண்டு நாள்களாக இப்பத்தியில் விவ ரித்து வந்தேன். அதனை இன்றும் தொடர்கின்றேன்.

கிளிநொச்சியில் புலிக ளின் சமாதானச் செயலகத் தில் என்னுடன் 02

## ஜனாதிபதி பதவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ் கோவில் வீதியிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் ஒன்றாக இணைப்பதற்கான பேச்சுகள் இடம்பெறுகின்றன எனஅரசியல் வட்டாரங்களில் பேசப்படுவது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதில ரணில் விக்கிரமசிங்க தற்போது இன்னுமொரு கட்சியின் தயவிலே இருக்கின்றார். அவர் தன்னுடைய கட்சியில் முன்னர் இருந்தவர்களை இப்போது மீண்டும் தன்னோடு இணைத்துக் கொண்டால் உண்மையில் அது அவருக்கு நன்மை தரும்.

ஆனால் அவரோடு இருந்தவர்கள் அவரோடு சேர்ந்து அவருடைய காலை வார இருக்கிறார்களோ என்று சொல்ல முடியாது. நான் முதலமைச்சராக இருந்த சமயம் நடந்தது போல அவருக்கும் செய்யப்பார்ப்பார்களா என்று தெரியவில்லை.

குறிப்பாக நான் ஒரு கட்சியில் இருந்து வந்தவன். அவர்களோடு சேர்ந்துதான் இந்த இடத்திற்கு வந்தேன். அவர்களோடு இணைந்து இருக்கின்றபோதே என்னோடு இருக்கின்ற ஆட்களே என் காலை இழுக்கப் பார்த்தனர். ஆனால் நான் தப்பி விட்டேன்.

ஆகவே இவ்வாறான விடயங்களை ஜனாதிபதிதான் யோசித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களால் அதில் எதுவும் சொல்ல முடியாது. ஆனால் உண்மையாகவே ஜனாதிபதி வேலைக்கு சஜித் பிரேமதாஸ சரியில்லை என்பது என்னுடைய கருத்து. அவ்வவுதான் இதில் நான் சொல்ல முடியும். - என்றார்.

## 13 சபைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைமுறைப்படுத்துவது குறித்து பார்க்கலாம் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

"புதிய கிராமம் - புதிய நாடு" தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் அம்பாறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 13 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்துக்கு ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட உள்ளது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு சில கட்சிகள் ஆதரவு தெரிவித்தும், சில தரப்புகள் எதிர்ப்பு தெரிவித்தும் வருகின்ற நிலையில் இதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் என்று மேலும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

"இவை எல்லாத்துக்குமே இந்த 13வது திருத்தச் சட்டம் முதலில் நாடாளுமன்றத்துக்கு விவாதத்திற்கு வரட்டும். வரும்போது பார்க்கலாம்." - எனப் பிரதமர் பதில் அளித்துச் சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவிடம் அனுமதி கோரியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தொடர் மின்சார விநியோகத்திற்கான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கடந்த மாதம் 21ஆம் திகதி முன்வைத்துள்ள யோசனையில், மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

மின்சார கட்டணத்தை 15 வீதத்தால் குறைப்பதற்கான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டு 20 நாள்கள் மாத்திரம் கடந்துள்ள நிலையில் மீண்டும் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளமை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## வடக்கு, கிழக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன் போதே தாம் மேற்கண்டவாறு வலியுறுத்தினார் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

"வடக்கில் கிழக்கிலாவது முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தச் சொல்லுங்கள். பொலிலிஸ் அதிகாரத்தைப் பிரச்சினையாக்கி மாகாண சபையை மறுப்பது நியாயமல்ல.

இந்தியத் தூதரகத்தில் அமைந்துள்ள மலையகக் கல்வி அறக்கட்டளையைப் புதுப்பியுங்கள்.

அதன்மூலம் இந்திய அரசின் 300 கோடி நன்கொடையை மலையகக் கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்துங்கள். அந்த நிதி யாருக்காக, எதற்காக வழங்கப் பட்டதோ அதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியத் தூதுவருடனான சந்திப்பின்போது எடுத்துரைத்தோம்." - என்றார்.

## கிழக்கில் அரச..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணவர்த்தனவிடம் நேரில் சமர்ப்பித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஊழல் மோசடி விசாரணைக் குழு ஒன்றை அமைப்பார் என அதன் போது பிரதமர் தமக்கு உறுதியளித்தார் என சாணக்கியன் எம்.பி. பின்னர் தெரிவித்தார்.

"இந்த ஊழல்கள் மக்களுக்கு எதிரான செயல்பாடாகும். அவை தொடர்பில் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து இவர்களின் (பிரதமர் போன்ற ஆட்சியாளர்களின்) வருகைகளை ஒட்டி எமது மக்களுடன் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டங்ள் முன்னெடுக்கப்படும்" - என சாணக்கியன் மேலும் தெரிவித்திருந்தார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் (கச்சேரி) பிரதமரின் வருகையை முன்னிட்டு நடந்த கூட்டத்தினிடையேயே இந்த ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலை அவர் சமர்ப்பித்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் பக்கத்தில் வரிசையில் போடப்பட்ட கதிரையில் சாணக்கியன் எம்.பி. அமரவில்லை. மாறாக, மக்களின் சார்பாக மக்களின் பக்கத்தில் ஒருவராக இரா. சாணக்கியன் அமர்ந்து கூட்டத்தில் பங்குபற்றினார்.

"இந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசு சார்ந்து திரை மறைவில் செயல்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது மக்களின் உரிமை மற்றும் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை, அரசு சார்ந்தவர்களின் ஊழல்களை, மக்களுக்கான அநீதிகளை கண்டுகொள்ளாது உதாசீனப்படுத்தும் விதமாக நடந்து கொள்கின்றனர். அதன் காரணமாகவே இன்றைய தினம் (நேற்று) அவர்களில் ஒருவனாக அரச அதிதிகளின் வரிசையில் அமராமல், மக்களோடு மக்களாக மக்கள் பக்கத்திலிருந்து இக்கூட்டத்தில் பங்குபற்றினேன். - என்றார் அவர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

கலந்துரையாடிக் கொண்டிருந்த புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் "அண்ணே! ரணிலின் தேர்தல் விஞ்ஞாபன அறிவிப்புப் புத்தகத்தைப் பாருங்கள். நாளை தாம் ஜனாதிபதியானால் முஸ்லிம்களுக்குத் தாம் என்ன செய்வார் என்று இரண்டு பக்கங்களில் விவரித்திருக்கிறார். அதுபோல மலையகத் தமிழர்களுக்கு செய்யப் போகின்ற விடயங்களையும் இரண்டு பக்கங்களில் விவரித்து இருக்கிறார். ஆனால் வடக்கு - கிழக்குத் தமிழர் குறித்து ஓரிரு பந்தியில் முடித்து விட்டார். இவரை நம்பலாமா? நம்பிப் பயன் உண்டா?" - என்று கேள்வி எழுப்பினார்.

நான் பதிலளிக்கத் தொடங்கினேன்.

"தம்பி நேற்று முன்தினம் நள்ளிரவு ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டில் அவரோடு நான் உரையாடிக் கொண்டிருந்த போது இதே கேள்வியை நானே அவரிடம் கேட்டேன். இதோ பாருங்கள், ஆங்கிலத்தில் உள்ள அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் சிவப்புக் கோடிட்டுக் குறிப்பிட்டு அவர் விளங்கப்படுத்திய அடையாளங்கள் உள்ளன. அவர் சரியான விளக்கம் தந்தார்" - என்றேன் நான்.

தமிழ்ச்செல்வனுக்கு நல்ல சந்தோஷம். ரணிலை மடக்கும் கேள்வி ஒன்றை நானே அவரிடம் நேரில் கேட்டு விட்டேன் என்ற கருத்தாக இருக்கலாம்

ஆவலுடன் என்னைப் பார்த்து "உங்கள் கேள்விக்கு ரணில் என்ன பதில் சொன்னார்?" - என்று கேட்டார்

(3ஆம் பக்கம் பார்க்க...)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் நடத்தை

*மனோ கணேசன் எம்.பி. யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாகக் கூறியபடி தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் சமஷ்டி பற்றித்தான் இப்போது பேசுகின்றன. அதுதான் ஒரே தீர்வு என்ற நிலைப்பாட்டில்தான் அவை உள்ளன. ஆனால் சமஷ்டியை அடையும் மார்க்கம் தொடர்பில் கொள்கை ரீதியில் அவற்றுக்குள் முரண்பாடுகள் நிலவுகின்றன என்பதே நிலைமை.*

*கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு கூறுவது போல நேரடியாக இறுதித் தீர்வான சமஷ்டி பற்றி மட்டுமே பேச்சும் முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதா அல்லது மற்றைய தரப்புகள் கூறுவது போல இடையில் அதிகாரப் பகிர்வு, 13 ஆவது திருத்தம் என்று பல கட்டங்களை - இடைத்தங்கல்களை - மேற்கொண்டு தாண்டியபடி சமஷ்டித் தீர்வுக்கு முயற்சிப்பதா என்பதுதான் இப்போது உள்ள சர்ச்சை. கேள்வி.*

*இந்தச் சர்ச்சையை ஒட்டிக் கட்டவிழும் விடயங்களை நோக்கினால், தமிழருக்கு நியாயமான தீர்வு எதுவும் சமஷ்டி மூலம் மட்டுமே கிட்டும் என்பதும் நிரூபணமாகி வருவதை அவதானிக்க முடியும்.*

*தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியத் தலையீட்டின் அடிப்படையில் உருவான 13 ஆவது திருத்தம் கூட, சமஷ்டி முறையிலான தீர்வு மட்டுமே தமிழருக்கு நியாயம் செய்யும் என்பதை நிரூபித்து நிற்பது கவனிக்கப்பட வேண்டும்.*

*சமஷ்டித் தீர்வு என்றால் என்ன? பகிரப்பட்ட அல்லது பரவலாக்கப்பட்ட அதிகாரம் மீண்டும் மத்திய அரசினால் பிடுங்கப்பட முடியாததாக இருக்குமானால் அது சமஷ்டிக் கட்டமைப்பே. அத்தகைய முறைமை ஒற்றையாட்சியில் சாத்தியம் இல்லை என்பது தெளிவானது.*

*13 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 35 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் அதில் கூறப்பட்ட முக்கியமான அதிகார பகிர்வுகள் - குறிப்பாக பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் - இன்னும் மாகாணங்களுக்கு வழங்கப்படவே இல்லை. வழங்கப்பட்ட அதிகாரங்களும் கூட காலத்துக்குக் காலம் திரும்பிப் பிடுங்கப்பட்டு விட்டன.*

*நாட்டில் தமிழர் தரப்பையும் அவர்களது தேசியத் தனித்துவத்தையும் அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சி பீடங்கள், தமிழருக்கான அதிகாரப் பகிர்வைத் தொடர்ந்து விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பது 13க்கு நேர்ந்த கதி மூலம் மீண்டும் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.*

*இத்தகைய பின்புலத்தில், ஒற்றையாட்சியின் கீழ் எந்த அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டாலும், அது பின்னர் அதே தென்னிலங்கையால் பிடுங்கப்பட்டு விடும் என்பதுதான் 13 மூலமும் மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கும் யதார்த்தமாகும். இந்தக் களப்புறச் சூழலில் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் 13 ஆவது திருத்தம் மூலம் பொலிஸ், காணி அதிகாரங்கள் உட்பட எத்தகைய வலுவான அதிகாரப் பகிர்வைச் செய்தாலும், அது நின்று, நிலைத்து, நீடிக்கப் போவதில்லை என்பது தெளிவு.*

*ஆகவே, சமஷ்டி அல்லாத - நின்று, நிலைத்து, நீடிக்கவே முடியாத  - கானல் நீர் ஒன்றுக்காக இப்போது குத்தி முறிவது பயனுள்ளதா என்பது சிந்திக்கப்பட வேண்டியதுதான்.*

*2016 முதல் 2019 வரை மேற்கொள்ளப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியின் போது தமிழர் தாயகத்திற்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட்ட அதிகார பகிர்வுக்கு அப்போது பிரதமராக முழு அளவில் இணங்கி வந்த ரணில் விக்கிரமசிங்க, இப்போது ஜனாதிபதிக் கதிரையில் இருந்து கொண்டு, தம்முடைய அரசியல் சுயநலங்களுக்காக பொலிஸ் அதிகாரள் பகிரப்படுவதற்கு ஆப்பு வைக்கும் முடிவை இந்தக் குறுகிய காலத்துக்குள் மேற்கொண்டு இருக்கிறார்.*

*தென்னிலங்கை ஆட்சியாளர்களோடு ஒற்றையாட்சிக்குள் எந்த அதிகாரப் பகிர்வுக்கு போனாலும் கடைசியில் இந்தக் கதிதான் நேரும் என்பதை ரணில் விக்கிரமசிங்க என்ற தனி மனிதரும் தமது நடத்தை மூலம் நிரூபித்து நிற்கிறார். இதைத் தமிழர் தேசம் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

## இரகசியம் பரகசியம்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ்ச்செல்வன்.

ரணில் எனக்குக் கூறிய பதிலை ரணிலே கூறுவது போல நான் தமிழ்ச்செல்வனிடம் கூறத் தொடங்கினேன்.

“நாளைக்கு நான் ஜனாதிபதியானால் மலையக மக்களுக்கும் நானே தலைவன். அதனால் அவர்களுக்கு என்ன செய்வேன் என்று விவரித்துள்ளேன்.  அதேபோல நாளைக்கு நான் ஜனாதிபதியானால் இலங்கை முஸ்லிம்களுக்கும் நானே ஜனாதிபதி. அதனால் அவர்களுக்கும் என்ன செய்யப் போகின்றேன் என்று விவரித்துள்ளேன். ஆனால் வடக்குக் கிழக்குத் தமிழர்களை பொறுத்தவரை நிலைமை வேறு. நான் ஜனாதிபதியானாலும் புலிகளுடன் பேசித்தான் அந்த மக்களுக்கு உரியவற்றை நான் செய்ய முடியும். அதனால்தான் அவர்களுக்கு என்ன செய்வேன் என்று எதையும் நான் விவரிக்கவில்லை. வெறுமனே, ‘புலிகளுடன் பேசி, சமாதானத் தீர்வு கண்டு, அதனை முன்னெடுப்பேன்’ என்ற சாரப்படக் கூறியுள்ளேன் என்று என்னிடம் ரணில் விக்கிரமசிங்க விரிவாகப் பதில் கூறினார்” – என்று நான் தமிழ்ச்செல்வனுக்கு விளங்கப்படுத்தினேன். என் பதில் கேட்டு அவர் வாயடைத்துப் போனார்.

அதைத்தொடர்ந்து ரணிலின் பக்கத்தில் உள்ள நல்ல விடயங்களை நான் சுமார் முக்கால் மணி நேரம் ஒரு குட்டி ‘லெக்சர்’ போல விவரித்து, வரிசைப்படித்தி அவருக்குத் தெரியப்படுத்தினேன்.

நான் ரணிலைப் பற்றிப் பேசப் பேச, டூத் பேஸ்ட் விளம்பரத்துக்குப் போஸ் கொடுப்பவர் மாதிரி புன்சிரிப்புச் சிரித்தபடி, ‘உம்’ கொட்டியவாறு செவிமடுத்துக் கொண்டிருந்தார் தமிழ்ச்செல்வன்.

நேரம் செல்லச் செல்ல, என் பேச்சுக்கு அவர் எடுபட்டு, அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்கு வந்து விட்டார் போல எனக்குத் தோன்றியது. என் தூதுப் பயணம் வெற்றி பெறும் என்பது போன்ற நம்பிக்கை எனக்குள் ஏற்பட்டது.

என் நீண்ட லெக்சர் முடிந்ததும், கடைசியாகச் சிரித்தபடி அவர் தந்த பதில் எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது.

“அண்ணே! நீங்கள் சொன்ன இவ்வளவு நல்ல விடயங்களும் ரணில் பக்கத்தில் இருக்கு அண்ணே. அதனால்தான் நாங்கள் அவரை வேண்டாம் என்கிறோம்” – என்றார் தமிழ்ச்செல்வன்.

அந்தப் பதிலைக் கேட்டு நான் விக்கித்துப் போனேன்.

“அண்ணே! உங்களுக்குத் தெரியும் ரணில் ஜனாதிபதியானால் அடுத்த 12 வருஷத்துக்கு அவர்தான் ஜனாதிபதி. எங்களை யுத்தம் செய்யவும் விட மாட்டார், ‘சமாதானம்’,’சமாதானம்’ என்று சொல்லியே எங்களையும் எங்கள் போராட்டத்தையும் நாசப்படுத்தி விடுவார். சண்டையும் பிடிக்க விடார். சமாதானமும் செய்யார். தீர்வும் தரார். தங்கட சர்வதேச வலைப்பின்னல் என்ற சிக்கலிலே எங்கள மாட்டி, எங்கள் போராட்டத்தையும் நாசப்படுத்தி விடுவார். அதனால அவர் வேணாம். விடயத்த இத்தோடு விடுவோம் அண்ண!” – என்று கதையை வேறு திசைக்குத் திருப்ப முயன்றார்.

எனினும் நான் விடவில்லை. தொடர்ந்தும் ரணிலின் பக்கத்து நல்ல விடயங்களையும் ராஜபக்ஷ பக்கத்தின் தீவிரப் போக்கு விவகாரங்களையும் விளங்கப்படுத்தினேன். விவரித்தேன். ஆனால் அவர் மசிபவராக இல்லை. ஒரு முடிவோடு இருப்பவராகத் தோன்றியது. வேறு வழியின்றி நான் வெறுங்கையோடு கொழும்பு திரும்பினேன்.

அதற்கிடையில், கொழும்பிலிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வவுனியா வந்து சேர்ந்திருந்த சந்திரசேகரனுக்கும் புலிகளின் நிலைப்பாட்டை தொலைபேசியில் தெளிவு படுத்தினேன்.

எனினும், புலிகளின் தலைமையின் முடிவை மாற்றச் செய்வதற்கான என் முயற்சியை விடாது தொடர்வேன் என்று ரணிலுக்குத் தொலைபேசியில் உறுதி கூறினேன்.

அதன்படி, சுமார் ஒரு வார காலம் தொலைபேசியில் மாறி மாறி தமிழ்ச்செல்வன், புலிகளின் பிற வன்னித் தலைவர்கள், லண்டனில் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் என்று பலரோடும் தொடர்ந்து பேசி முயற்சித்து வந்தேன். என் கருத்து நிலைப்பாடு எதோ ஒரு வகையில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கருத்துக்கு – காதுக்கு – எட்டுவதை உறுதிப்படுத்தினேன்.

இறுதியாக தேர்தலுக்கு நான்கு, ஐந்து நாள்கள் இருக்கும்போது புலிகளின் தலைமையின் மனத்தை மாற்றும் முயற்சியில் அதிக கஷ்டப்பட்டு நான் வெற்றியை எட்டும் நிலைமை கிட்டியது.

ஆனால், கடைசியில் ‘வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் பானையை உடைத்த கதையாக’ எல்லாவற்றையும் போட்டுடைத்தார் ரணில் விக்கிரமசிங்க.

அவற்றின் விவரங்களை நாளை பார்ப்போம் நண்பர்களே!

# தமிழ்த் தேசியம் பேசுவோரும் கூட இன்று டக்ளஸ் பாணியிலேயே செயற்படுகின்றனர்

## அதை நியாயப்படுத்த மனோ கணேசன் முயலக் கூடாது என வற்புறுத்திக் கோருகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

- எஸ்.நிதர்ஷன் -

**‘மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி’ என்று கோசத்தை வைத்துக் கொண்டு டக்ளஸ் தேவானந்தா ஒற்றையாட்சி அடிப்படையில் எவ்வாறு செயற்பாடுகிறாரோ அதே போன்றே ஏனைய தமிழர் தமிழக் கட்சியினரும் சமஷ்டி என்று சொல்லிக் கொண்டு, ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு செயற்படுகின்றனர் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



டக்ளஸ் தேவானந்தா தவறு இழைப்பவராக மக்கள் மத்தியில் துரோகியாகப் பார்க்கப்படுகின்றார். இன்றைக்கு தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு, அதே தவறைச் செய்கின்ற மற்றைய தரப்புக்களை மனோ கணேசன் ஆதரிக்கின்றார். அவர்களின் தவறை மூடி மறைக்கின்ற வகையிலோ அல்லது அதற்குத் துணை போகின்ற வகையிலே மனோ கணேசன் செயற்படக் கூடாது என்றும்வர் கேட்டுக் கொண்டார்.

கஜேந்திரகுமாரின் கட்சிக்கு மட்டுமே சமஷ்டிக் கோரிக்கை உரித்தானதல்ல என மனோ கணேசன் தெரிவித்த விடயம் தொடர்பாக முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மனோ கணேசன் ஏன் அவ்வாறு கூறுகின்றார் என்பது எமக்கு விளங்கவில்லை. ஆனால் நாங்கள் மட்டும் தான் சமஷ்டி கோருகின்றோம் என்று எந்தவொரு இடத்திலும் கூறவில்லை. மாறாக நாங்கள் முன்வைக்கிற விமர்சனமே மற்றக் கட்சிகள் தமிழ் மக்களிடம் வாக்கைப் பெறுவதற்கு சமஷ்டியைத் தான் கோரினார்கள். ஆனால் அதன் பின்னர் அவர்கள் அதற்கு மாறாகச் செயற்படுகிறார்கள் என்பதுதான்.

வாக்கைப் பெறுவதற்காக சமஷ்டியைக் கோரினார்கள். வாக்கைப் பெற்று அடுத்த நாள் சமஷ்டியை விட்டுவிட்டு ஒற்றையாட்சிக்குள் தமிழர் அரசியலை முடக்குவதற்காகத்தான் செயற்படுகிறார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாக உள்ளது. மக்கள் கொடுத்த ஆணையின் பிரகாரம்தான் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

ஆனால்மக்கள்கொடுத்த ஆணையை மீறி, அதற்கு மாறாகச் செயற்படுவதென்பது துரோக்ச்ம். அவ்வாறு நடந்து கொள்ளக் கூடாதென்றுதான் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா கூட தனது கட்சியின் கோசத்தில் “மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி“ என்ற கோட்பாட்டை வைத்திருக்கிறார் என்றும் அது சமஷ்டி என்றும் மனோகணேசன் கூறியிருக்கின்றார். அது உண்மை. சமஷ்டிக் கட்டமைப்பின் செயல்வடிவம் “மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில சுயாட்சி”தான்.

அதை சமஷ்டி என்று சொல்லாமல் தன்னுடைய கோசமாக டக்களஸ் தேவானந்தா இப்படிச் சொல்லுகிறார். ஆனால் எந்தவொரு இடத்திலும் டக்ளஸ் தேவானந்தா சமஷ்டிக்காக நேர்மையாக பயணிக்கிறார் என்று மக்கள் சொல்லுவதில்லையே. ஏனெனில் அது ஒரு வெறும் கோசம். வாக்குப் பெறுவதற்காகவும், தாங்கள் பிழையான தரப்பு இல்லை என்பதைக் காட்டுவதற்காகவும் “மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி“ – சமஷ்டி – என்ற மந்திரத்தைச் சொன்னால் தங்களை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலோ அல்லது வேறு எதற்காகவுமோ ஒரு கோசமாகத்தான் அதனை வைத்திருக்கின்றார்.

ஆனால் அவர்கள் செயற்படுவது முழுவதும் ஒற்றையாட்சிக்குள்தான். அது தவறு என்று சொல்கிறோம். அது படுமோசமானது. அதனால் தான் டக்ளஸ் தேவானந்தா மக்கள் மட்டத்தில் துரோகியாகப் பார்க்கப்படுகின்றார். இன்றைக்கு அதே தவறைத்தானே மற்றத் தரப்புகளும் செய்கின்றனர். அதே விட்யத்தைத் தானே மனோ கணேசனும் ஆதரிக்கிறார்.

வாக்கைப் பெறுவதற்கு சமஷ்டி. ஆனால் அதற்குப் பிறகு இதைப்பற்றி கதைக்காமல் ஒற்றையாட்சி என்பதைப் பற்றி கதைக்கின்றனர். அது மட்டுமல்ல,13 ஆவது திருத்தம் பற்றியும் கதைக்கின்றனர். இந்த 13 இலிருந்து படிப்படியாகச் செல்லலாம் என்று சொல்லி, இந்த 75 வருடமாக முதற்படியையும் கூடத் தாண்டவில்லையே. என்னுடன் நடந்த விவாதத்தில் கூட, “எடுத்த எடுப்பில் நாங்கள் முழுவதையும் அடைய முடியாது. படிப்படியாகத்தான் தாண்டப் பார்க்கக வேண்டும்” என்று மனோ கணேசன் சொல்கின்றார். உண்மையில் 75 வருடமாக ஒரு படியையயாவது தாண்டினீர்களா.? உங்கள் படிப்படியில் எதை அடைந்தீர்கள்? ஒன்றுமே அடைய வில்லையே. 75 வருடத்திற்குப் பிறகும் நாங்கள் படிப்படியாக அடைய வேண்டுமென்றால் அதில் ஏதோ தவறு உள்ளது என்ற தெளிவு வர வேண்டும். தமிழர்களைப் பொறுத்தவரையில் அந்த தெளிவு மிகத் தெளிவாக வந்து கொண்டுள்ளது.

மனோ கணேசன் மலையக மக்கள் சார்ந்த ஓர் அரசியலைச் செய்கின்றமையால் இதை அவர் விளங்கிக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் மனோ கணேசனுக்கு இங்கு நடக்கின்ற விடயங்கள் தெரிந்திருக்க வேண்டும். ஈழத்தமிழர்களை பொறுத்தவரையில் இன்றைக்கு சிறிலங்கா அரசு வங்குரோந்திற்கு தள்ளப்பட்டிருக்கி நிலையில் புலம் பெயர் தரப்பின் பணத்திற்குக் கெஞ்சுகின்ற அளவில்தான் சிறிலங்கா இருக்கிறது.

இந்நிலையில் தமிழ் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, பேரம் பேசி, இனப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வைப் பற்றி கதைக்காமல் விட்டால் அது முற்றுமுழுழுதாக இந்த இனத்திற்கு செய்கின்ற துரோகமாகத்தான் அமையும். அதற்கு மனோ கணேசன் துணைபோகக் கூடாது. டக்ளஸ் தேவானந்தாவை எந்தளவு தூரத்திற்கு தமிழ் மக்கள் பிழையாகப் பார்க்கின்றனரோ அதே பிழையை தமிழ்த் தேசியகம் பேசிக் கொண்டு மற்றவர்கள் செய்கின்றமைக்காக அதைச் சரியென்று பேசுவது தவறு. மனோ கணேசன் அந்தத் தவறை மூடி மறைக்கின்ற வகையிலையோ அல்லது துணை போகின்ற வகையிலையோ செயற்படக் கூடாது. – என்றார் கஜேந்திரகுமார்.

13 ஆவது திருத்தத்தில் உள்ளவற்றை இலங்கை அரசாங்கம் பறிக்கின்ற போது இந்தியா எதனையும் செய்யாமல் பார்த்துக் கொண்டே இருந்தது. ஆகவே இந்தியா எவ்வளவு தூரம் தமிழர் விடயங்களைக் கையாளளும் என்பதை தமிழ் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று மனோ கணேசன் தெரிவித்த கருத்திற்கும் கஜேந்திரகுமார் பதிலளித்துள்ளார்.

அதாவது ஒன்றுமே கொடுக்கத் தயாரில்லை. அதை விளங்கிக் கொண்டு இந்தியா கடமைக்கு 13 ஆவது திருத்தத்தை பற்றிக் கதைக்கின்றது என்றால் அதையாவது நீங்கள் பெற்றுக் கொள்ளப் பாருங்கள், வேறு ஒன்றையும் பற்றி நீங்கள் கதைக்க வேண்டாம் என்று அவர் சொல்லுகின்ற மாதிரிதான் இருக்கிறது.

இவ்வாறு சொல்லுவது ஒரு பக்கம் சமஷ்டிதான் இலக்கு என்று சொல்வதற்கு முரண்பாடாக இருக்கிறதே. சுமஷ்டியைக் கைவிடச் சொல்லித் தான் இவரும் சொல்லுகிறார். ஆகவே இந்த விடயங்களில் அவர் கொஞ்சம் யோசிக்க வேண்டும். ஆனால் நான் நினைக்கிறேன், சில வேளை அவருக்கு வடக்கு – கிழக்கு அரசியலில் அனுபவம் இல்லாத படியால், அந்த நுணுக்கங்களை விளங்கிக் கொள் ளமல், நேருக்கு நேர் முரண்பாடான கருத்துக்களை தெரிவிக்கிறார். அவர் அப்படி சொல்வதால் அவரின் நம்பகத் தன்மைக்குதான் கேள்விக்குறியாக மாறும் என்பதை அவர் விளங்கிக் கொள்வது உண்மையில நல்லது. – என்றார் கஜேந்திரகுமார்.

## பறாளாய் ஆலய மரம் குறித்துக் கதை விடும்

# அரசுக்கு எதிராக இன்று சுழிபுரத்தில் யாழ்.பல்கலை மாணவர் கவனவீர்ப்பு

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் எனக் கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று காலை பத்து மணியளவில் சுழிபுரம் சந்திப் பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

வரலாற்றைத் திரிவுபடுத்தும் சிங்கள அரசு இன்னும் ஒரு படி மேல் சென்று சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய வரலாற்றையும் மேலும் திரிவடையச் செய்துள்ளது.

சங்கமித்தை இலங்கைக்கு வருகை தந்தது கி.மு 3ஆம் நூற்றாண்டு என வரலாற்று மூலாதாரங்களில் திரிபடையக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆலய தர்மகர்த்தாவினர் குறித்த ஆலயம் 1768 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படும் பொழுது எதுவித அரச மர எச்சங்கள் குறித்தும் தமது முன்னையவர்களோ அல்லது ஆதாரங்களோ குறிப்பிடவில்லை எனவும் தற்பொழுது ஆலயத்தில் உள்ள மரம் மிக குறைந்தளவான காலப்பகுதிக்கு உரியது எனவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த ஆலயத்தினரிடம் ஆகக்குறைந்த கலந்துரையாடலை கூட செய்யாது எதேச்சதிகாரமான முறையில் இந்த சிங்கள அரசு திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

ஆகவே தொடர்ச்சியாக திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளும் சிங்கள அரசு உடனடியாக அதை நிறுத்த வேண்டும். இதனை வலியுறுத்தி சனிக்கிழமை காலை 10 மணியளவில் சுழிபுரம் சந்தி பகுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆகவே இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக இதில் கலந்து கொள்ளும்படி பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புக்கள், தமிழ் தேசியத்தின்பால் செயற்படும் இளைஞர், யுவதிகள், சிவில் சமூக பிரதி நிதிகள், தமிழ் தேசிய கட்சிகள் என அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின்சாரம் துண்டிக்கப்பட்ட மிஹிந்தலை விகாரையின் ரூ.41 லட்சம் கட்டணத்தைப் பொறுப்பேற்றார் சஜித்!

மின் கட்டண நிலுவை காரணமாக மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்தவர்களினதும் தனவந்தர்களினதும் உதவியுடன் 41 லட்சம் ரூபா மதிப்பிலான மின் கட்டண பட்டியலை செலுத்த நடவடிக்கை எடுத்துவிட்டதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸதெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக்கு பௌத்த மதத்தை கொண்டு வந்த மிஹிது தேரரின் பாதம் தொட்ட வரலாற்று சிறப்பு மிக்க மிஹிந்தலை ரஜமஹா விகாரைக்கு அரசாங்கம் பாரிய மின் கட்டணத்தை சுமத்தியதாகவும் இதன் காரணமாக விகாரையின் மகாநாயக்க தேரருடன் நிர்வாகமும் நெருக்கடி நிலைக்கு உள்ளானதாகவும் கூறப்பட்டது. இது தொடர்பில் அண்மையில் நான் விகாரைக்கு விஜயம் செய்த போது இது தொடர்பில் மகாநாயக்க தேரர் என்னிடம் விடுத்த கோரிக் கைக்கு அமைய மின் கட்டணத்தையும் பெரஹராவிற்கான பூரண செலவையும் தான் ஏற்பார் என வாக்குறுதி அளித்தார் எனவும்,இதன்படி விகாரையின் 41லட்சம் ரூபா மின் கட்டணத்தை ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்தவர்கள் மற்றும் தனவந்தர்களின் உதவியுடன் செலுத்த நடவடிக்கை எடுத்து விட்டோம். என்று உள்ளது.

பல வருடங்களாக செலுத்தாமல் உள்ள தனது பங்காளிகளின் மின் கட்டணத்தை அறவிடாது, பங்காளிகளின் வீட்டு மின் விநியோகத்தை துண்டிப்பதற்கு எண்ணம் கொள்ளாத அரசாங்கம், வரலாற்று சிறப்புமிக்க மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் மின் விநியோகத்தைத் துண்டித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தர்ப்பங்களுக்காக மாத்திரம் மத, கலாச்சாரத்தை கையில் எடுக்கும் தற்போதைய அரசாங்கத்தின் உண்மையான சுயரூபம் இந்த மின்துண்டிப்பின் மூலம் வெளிப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கோழைத்தனமான நடவடிக்கைகளின் ஊடாக பௌத்த மற்றும் ஏனைய மதஸ்தலங்கள் மீது மேற்கொள்ளும் கீழ்தரமான குந்தக செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# அரைக் கோடி ரூபா பீடி இலைகளுடன் வண்ணாத்திவில்லில் ஒருவர் சிக்கினார்

வண்ணாத்திவில்லு ஆலங்கதோனி கடற்கரைப் பகுதியில் பீடி இலைகளை ஓட்டோவில் ஏற்ற முற்பட்ட ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமைஅதிகாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வண்ணாதிவில்லு பொலிஸாருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் 16 பொதிகளில் 500 கிலோ விற்கும் அதிக எடையுடைய பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், பீடி இலைகளைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கடத்தலோடு சம்பந்தப்பட்ட கரைத்தீவு பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.





கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 50 லட்சம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியுடையவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் ஓட்டோவுடன் புத்தளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஒற்றையாட்சியின் கீழ்தான் நாட்டில் அதிகாரப் பகிர்வு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்

ஒற்றையாட்சி முறைமை கொண்ட நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு உடன்படுகிறோம் என் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருப்பதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக 400 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட குளம்முறிப்பு, கச்சிலைமடு, கதலியாறு மற்றும் ஒலுமடு ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட நானோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இதனை தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. “அனைவருக்கும் பாதுகாப்பான குடிதண்ணீர்” என்ற அரசின் கருத்தின் கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மேற்படி அமைச்சின் கீழ் உள்ள மீள்குடியேற்றப் பிரிவு, சமூக நீர் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செலவிடப்பட்ட தொகை 205 மில்லியன் ரூபாவாகும்.

அதன் முதற்கட்டமாக 25 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களின் பாவனைக்கு ஒப்படைக்கப்படும்.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நாளொன்றுக்கு சுமார் 2000 லீற்றர் நீரை முழுவதுமாக சுத்திகரிக்கும் திறன் கொண்டவை எனவும் மீள்குடியேற்ற பிரிவு கூறுகிறது.

நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிக்கும் போது நீரிலிருந்து அதிக உப்புகள் அல்லது இருவேறு கூறுகளை நீக்குகிறது. மேலும், நனோ சுத்திகரிப்பு மூலம் நச்சுகள், கன உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க –

“நம் நாட்டின் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் நன்றி உணர்வு உள்ளவர்கள் என்பதை நான் அறிவேன். 30 வருடங்களாக யுத்தம் இடம்பெற்ற இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கம் என்ற வகையில் எமக்கு உள்ளது. வடக்கு மக்கள், தெற்கு மக்கள் அனைவரும் ஒன்றுதான்.

எமது பிள்ளைகள் பெறும் கல்வியை வடக்குப் பிள்ளைகளும் பெற வேண்டும். ஆனால் யுத்த காலத்தில் இந்த பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்க வேண்டும். மக்களுக்கு மனித உரிமைகளை வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அமைச்சர் சனத் நிஷாந்த தலையிட்டு வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் நனோ தொழில்நுட்பத்தின் கீழ் 50 குடிதண்ணீர் சுத்திகரிப்பு திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். எதிர்காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மேலும் 400 நீர் சுத்திகரிப்பு அலகுகளின் வேலைகளை நிறைவுசெய்ய முடியும் என எதிர்பார்க்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீட்டு உதவி வழங்கி வீடு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். இப்பகுதி மக்களுக்கு வீடுகள், குடிதண்ணீர் வழங்குவதற்கு இப்பகுதியின் தலைவராக உள்ள அமைச்சர் காதர் மஸ்தான் பெரும் பணி செய்கிறார். ஜனாதிபதியுடன் கலந்துரையாடி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு அவர் செயற்பட்டு வருகின்றார்.

இன்று அதிகாரப் பகிர்வு தொடர்பில் மீண்டும் விவாதங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒற்றையாட்சி நாட்டின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் என்பது நம் அனைவரின் நம்பிக்கை. நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அனைவரும் இருக்கிறோம். வடகிழக்கு மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். – என்றார்.

இந்நிகழ்வில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்யானந்த, மேலதிக செயலாளர் (வீடமைப்பு) டபிள்யூ.எம். ஆனந்த, பணிப்பாளர் வீ. பிரேமசந்திரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கிண்ணியா புதுக்குடியிருப்பில் புதிய மைதானம் ஒழுங்கமைப்பு

## குட்டியாகுளப் பிரதேசக் கழகங்கள் அதனை பயன்படுத்துவதற்கு வாய்ப்பு





(எஸ். சினீஸ் கான்)

நீண்டகாலமாக கிண்ணியா புதுக்குடியிருப்பு மற்றும் குட்டியாகுளம் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் பயன்படுத்துவதற்கு மைதானம் இல்லாமல் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் அண்மையில் குட்டியாகுளப் பிரதேசத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வருகின்ற காணியை பயன் படுத்துவதற்கு திருகோணமலை மாவட்டத்தின் உதவி ஆணையாளர் விஷ்ணுவரதனுடன் கலந்துரையாடியதற்கமைவாக நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

அதற்கமைவாக நாடாளுமன்ற உறுப்பினரின் முயற்சியுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மைதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை ஐம்பது வருடங்களுக்கு மேல் விளையாடுவதற்கு நிரந்தர இடம் இல்லாமல் இருந்தகுறை இதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# பிரதமரின் பங்கேற்புடன் ‘புதிய கிராமம் - புதிய நாடு’ தேசிய நிகழ்ச்சி திட்ட அமர்வு நேற்று மட்டக்களப்பில்

(பழுவூரான்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்துவதற்குரிய கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுப்படுத்துவதற்கான பல்துறை இணைந்த பொறிமுறை தொடர்பான “புதிய கிராமம் - புதிய நாடு” தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான விசேட கலந்துரையாடல்





நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந் நிகழ்வில், சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான ஜனக வக்கும்வெற, அசோக் பிரியந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா.சாணக்கியன், உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்கான ஜனாதிபதி ஆலோசகர் சுரேன் வட்டகொட, அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



உணவுப்பாதுகாப்புத் திட்டத்திற்கான ஜனாதிபதி ஆலோசகர் சுரேனது உணவுப் பாதுகாப்புத் தொடர்பான உரையைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவுப் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு திட்டங்கள் குறித்து மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா விரிவாக விளக்கமளித்தார். பிரதம அதிதி உள்ளிட்ட அரசியல் பிரிதிநிதிகளின் உரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காணி உறுதிகள், வீடமைப்புத் திட்டத்திற்கான காசோலைகள், விவசாயிகளுக்கான விதைகள், மரக்கன்றுகள், விசேட தேவையுடையோருக்கான உபகரணங்கள், விளை யாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், உழவு இயந்திரம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான பஸ் பாஸ் உள்ளிட்டவை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் வழங்கி வைக்கப்பட்டன.

# மூதூர் படுகொலைகளின் நினைவேந்தல் யாழில்






– எஸ்.நிதர்ஷன் –

திருகோணமலை மூதூரில் படுகொலை செய்யப்பட்ட “அக்ஷன் பெயிம்” தொண்டு நிறுவன பணியாளர்களின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில் நேற்று இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் யாழ் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று மாலை இந்நினைவேந்தல் இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் திருவுருவப் படம் தாங்கிய பதாகை வைக்கப்பட்டு, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதலாவது சுடரை ஏற்றி வைத்தமையைத் தொடர்ந்து ஏனையவர்களும் சுடரேற்றி அஞ்சலி செய்தனர்.

கடந்த 04.08.2006 ஆண் ஆண்டு திருகோணமலை மூதூரில் வைத்து “அக்ஷன் பெயிம்” தொண்டு நிறுவனம் பணியாளர்கள் 17 பேர் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ‘வாய்மையே வெல்லும்’ ராகுல் காந்தி பெருமிதம்





‘வாய்மையே வெல்லும். எனது பாதையில் நான் தெளிவாக இருக்கிறேன்’ என்று காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தனது இரண்டு வருட சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்த உச்ச நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின் போது மோடி என்ற பெயர் குறித்து அவதூறாக பேசியதாக காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி மீது தொடரப்பட்ட வழக்கில் சூரத் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகள் தண்டனை விதித்திருந்தது.

இதனை எதிர்த்து தண்டனையை இடைநிறுத்த வேண்டும் என்று ராகுல் காந்தியின் கோரிக்கையை குஜராத் உயர் நீதிமன்றம் கடந்த 7 ஆம் திகதி நிராகரித்தது. இதனைத் தொடர்ந்து அவர் உச்ச நீதிமன்றத்தில் தண்டனையை நிறுத்திவைக்கக் கோரி மேல் முறையீடு செய்தார். வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் நேற்று ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு இடைக்கால தடை விதித்தது.

இந்த உத்தரவுக்குப் பின்னர், காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, ஏ.எம்.சிங்வி, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, ஜெய்ராம் ரமேஷ் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதன்போது பேசிய ராகுல் காந்தி, இன்று இல்லை என்றாலும், நாளை இல்லை என்றாலும், என்றாவது ஒரு நாள் வாய்மை வென்றே தீரும். எனது இலக்கு எனக்குத் தெரியும். நான் என்ன செய்யவேண்டும் என்பதும் எனக்குத் தெரியும். இந்த விவகாரத்தில் உறுதுணையாக நின்ற, எங்களுக்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி. பொதுமக்கள் காட்டும் அக்கறைக் கும் அன்புக்கும் நன்றி என்று தெரிவித்துள்ளார்.

# அண்ணாமலை நடைபயணத்தில் காளை திமிறியதால் பரபரப்பு



மேலூரில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் நடைபயணத்தின் போது ஜல்லிக்கட்டுக் காளை திமிறியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ‘என் மண், என் மக்கள்’ என்ற பெயரில் பாத யாத்திரை நடத்தி வருகிறார். மதுரை மாவட்டம் மேலூர் அரசு கலைக்கல்லூரி முன்பு அண்ணாமலை நேற்று பாத யாத்திரையை தொடங்கினார்.

மேலூர் பேருந்து நிலையம் அருகே அண்ணாமலை பேசும்போது, பிரதமர் மோடி விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்தில் உரம் வழங்கி வருகிறார். பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும். அமைச்சர் உதயநிதியும், முதல்வரின் மருமகன் சபரீசனும் 30 ஆயிரம் கோடி ரூபா சம்பாதித்தனர் என அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். இதனால் பழனிவேல் தியாகராஜனிடம் இருந்து நிதித்துறை பறிக்கப்பட்டு, டம்மி பதவி வழங்கியுள்ளனர்.

தமிழகம் அதிகளவு கடனில் உள்ளது. மதுபானம் ஏழை குடும்பங்களை பாதித்து வருகிறது. மதுபான கடைகளை திறப்பதால் குடிக்காதவர்கள் கூட குடிக்க நினைக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக, மேலூர் அரசு கல்லூரி முன்பு அண்ணாமலைக்கு வரவேற்பு அளிக்க ஜல்லிக்கட்டுக் காளை அழைத்து வரப்பட்டது. அப்போது திடீரென ஜல்லிக்கட்டு காளை திமிறியது. இதனால், அங்கு கூடி நின்றவர்கள் விலகி ஓடினர். பின்னர் காளை அமைதியான பிறகு காளையை வணங்கிவிட்டு அண்ணாமலை பாத யாத்திரையை தொடங்கினார்.

# மோடியுடன் கர்நாடக முதல்வர் சந்திப்பு



கர்நாடக முதல்வர் சித்தராமையா டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசியுள்ளார்.

கர்நாடாவில் கடந்த மே மாதம் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதை தொடர்ந்து, முதல்வராக சித்தராமையா பொறுப்பேற்றார். அவர் கடந்த ஜூன் மாதம் டில்லி சென்றபோது பிரதமர் நரேந்திர மோடி வெளிநாடு சென்றிருந்தார். இதனால் அவரை சந்திக்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் டில்லிக்கு சென்ற சித்தராமையா நாடாளுமன்ற அலுவலகத்தில் பிரதமர் நரேந்திர மோடியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

முதல்வரான பின்னர் முதல் முறையாக சந்திப்பதால் அவர் கர்நாடக முறைப்படி பிரதமருக்கு மைசூரு தலைப்பாகை மற்றும் சந்தன மாலை அணிவித்துள்ளார்.

# ரஷ்ய போர் கப்பலை தாக்கும் உக்ரைன் கடல்வழி ட்ரோன்கள்



ரஷ்ய போர் கப்பலை உக்ரைன் கடல் வழி ட்ரோன்கள் தாக்கும் காணொலி காட்சிகள், உக்ரைனின் பாதுகாப்பு சேவைகளால் பகிரப்பட்டுள்ளது.

குறித்த காணொலியில், 'உக்ரைனிய கடல்வழி ட்ரோன்கள் கருங்கடல் வழியாக நகர்ந்து ரஷ்யாவின் நோவோரோசிஸ்க் துறைமுகத்திற்கு அருகே நின்று கொண்டு இருந்த ரஷ்ய கப்பல் மீது மோதியுள்ளன.

இந்த நிலையில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், தளத்திற்கு வெளியே நடத்தப்பட்ட இரண்டு உக்ரைனிய ட்ரோன்களின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என தெரிவித்துள்ளது.

அத்துடன், தாக்குதலில் ஈடுபட்ட இரண்டு ட்ரோன்கள் முழுவதும் தாக்கி அழிக்கப்பட்டன எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யாவின் ஒலெனெகோர்ஸ்கி கோர்னியாக் கப்பல் உக்ரைனின் கடல்வழி ட்ரோன்களால் தாக்கபட்டது என உக்ரைனிய உளவுத் துறை தெரிவித்துள்ளது.

இவை உபகரணங்கள் மற்றும் பணியாளர்களை கடற்கரையில் தரையிறக்கும் வகையில் வடிவமைக் கப்பட்டவை.

இந்த தாக்குதலின் போது 450 கிலோ ரி.என்.ரி களை உக்ரைன் ட்ரோன்கள் சுமந்து இருந்தமையுடன் 100 ரஷ்ய பணியாளர் கப்பலில் இருந்தனர் எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால் ரஷ்ய கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் உயிரிழப்புகள் குறித்த எந்த தகவல்களையும் அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

இருப்பினும் துறைமுக தகவல் அறிந்த ஆதாரம் வழங்கிய தகவலில், ரஷ்ய கடற்படை கப்பல் ஒன்று சேதமடைந்து கரைக்கு இழுத்து வரப்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

## கனடாவின் ரொறன்ரோ நகரில் வீடுகளின் விலைகள் அதிகரிப்பு!




கனடாவின் ரொறன்ரோ நகரில் வீடுகளின் விலைகள் அதிகரித்துள்ளன என ரொறன்ரோ பிராந்திய ரியல் எஸ்டேட் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ரொறன்ரோ நகரில் வீடுகளின் விலைகள் அதிகரித் துள்ள அதேவேளை, வீடுகளின் விற்பனையும் அதிகரித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் வீடுகளின் விலைகள் உயர்வடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஜூலை மாதத்தில் சுமார் 5, 250 வீடுகள் விற்பனை செய்யப்பட்டன எனவும் இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 11.5 வீத வளர்ச்சி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வீடுகளின் சராசரி விலையும் 4.2 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது என தெரிவிக்கப் படுகிறது.

## ரஷ்ய எதிர்க்கட்சி தலைவருக்கு 19 ஆண்டுகள் சிறை தண்டனை!



பயங்கரவாத குற்றச்சாட்டில் ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னிக்கு 19 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் மிக முக்கியமான எதிரியாக நவால்னி விளங்குகிறார். மாஸ்கோவில் இருந்து கிழக்கே 145 மைல் தொலைவில் உள்ள மெலெகோவோவில் உள்ள அதிகபட்ச பாதுகாப்பு சிறைச்சாலையில் நவால்னி ஏற்கனவே 11 1/2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில் நவால்னிக்கு எதிரான வழக்கில்,ரஷ்ய நீதிபதி புதிய தண்டனையை வழங்கியுள்ளார்.

இதன்படி பயங்கரவாத குற்றச்சாட்டில் அலெக்ஸி நவால்னிக்கு கூடுதலாக 19 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

புடினின் ஆட்சிக்கு எதிரான நவால்னியின் பிரச்சாரங்களில் இருந்து உருவாகும் சமீபத்திய குற்றச்சாட்டுகளுக்காக ரஷ்ய வழக்கறிஞர்கள் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை கோரியுள்ளனர்.

நவால்னிக்கு எதிரான ஐந்தாவது பயங்கரவாத குற்றச்சாட்டு இதுவாகும்.

47 வயதான நவால்னி, விஷம் அருந்தியதில் இருந்து குண மடைந்து ஜேர்மனியில் இருந்து ரஷ்யாவுக்கு திரும்பிய பின்னர் 2021ஆம் ஆண்டு முதல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஏன் இந்த அவசரம் விமல் சொக்கநாதன்?



## மனோ கணேசன் இரங்கல்

தமிழ் ஒலிபரப்பு உலகில் ஒரு முன்னணியாளராக இருந்தவரே விமல் சொக்கநாதன் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

”விமல் சொக்கநாதனின் மறைவு என்னைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டது. என்ன அவசரமோ? யார் அழைத்தார்களோ? போயே போய் விட்டார்.

விமல் ஒரு பன்முக ஆளுமை. தமிழ் ஒலிபரப்பு உலகில் ஒரு முன்னணியாளராக இருந்தவர். பல நிகழ்ச்சிகளைத் தயாரித்தும், அதில் பங்கேற்றும் தனது குரல் வளத்தின் மூலம் அதற்குப் பெரும் வரவேற்பைப் பெற்றுத் தந்தவர்.

எமது தந்தை வீ. பி. கணேசனின் “புதிய காற்று“ திரைப்படத்திலும் பங்கேற்று நடிப்பு துறையிலும் தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார் விமல்.



தனது தொழில்சர் சட்டத்தரணிப் பணிக்காக லண்டன் சென்ற பிறகும், அவருக்கு வானொலி மீதிருந்த அளப்பரிய பற்று குறையவில்லை. பி.பி.சி. தமிழோசையில் அவர் செய்தி வாசிப்பாளராகப் பல தசாப்தங்கள் பணியாற்றினார்.

தனது குரலின் ஏற்ற இறக்கங்கள், உச்சரிப்பு, மொழிபெயர்ப்பில் எளிமையான நடை ஆகியவை மூலம் அவரது ஆளுமை மேலும் விரிவடைந்து பிரமலமானார்.

எழுத்துலகிலும் காலடி பதித்திருந்த அவர் வீரகேசரி இதழிற்கு வாரம் ஒரு கட்டுரையை எழுதி வந்தார். அந்தக் கட்டுரைகளின் தொகுப்பு “லண்டனிலிருந்து விமல்“ என்ற தலைப்பில் அண்மையில் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் வெளியானது.

கொழும்பு வெளியீட்டில் பிரதம அதிதியாகப் பங்கேற்று அந்நூல் குறித்து பேசியது எனது மனதில் இன்றளவும் பசுமையாக உள்ளது. அவரது உடல் நிலையில் தளர்ச்சிகள் ஏற்பட்டிருந்தாலும், உள்ளத்தளவில் உற்சாகத்தில் சிறிதும் குறைவில்லாமல் இருப்பதை அந்நூல் வெளியீட்டு விழாவில் நான் அவதானித்தேன்.

இன்றைய இளைய தலைமுறை செய்தி வாசிப்பாளர்கள், எழுத்தாளர்களுக்கு அவர் ஒரு எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாகவும், தவிர்க்க முடியாத ஆளுமையாகவும் உள்ளார் என்பது மறுக்க முடியாதது.

ரயில் விபத்தில் அவர் அகால மரணமடைந்தது என்னை மிகவும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. எம்மிடையே குடும்ப ரீதியாக நல்லுறவும் இருந்தது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார் மற்றும் நேயர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், அவருக்கு எனது அஞ்சலியையும் செலுத்துகின்றேன்.”

- என்றுள்ளது.

# ஹெரோயினுடன் கைதான மனைவியை பொலிஸில் வைத்துத் தாக்கிய கணவன்

## யாழ்ப்பாணத்தில் பரபரப்புச் சம்பவம்

- எஸ்.நிதர்ஷன்-

ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் (வயது - 36) பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அந்தப் பெண்ணிண் கணவர் பொலிஸ் நிலையம் சென்று அந்தப் பெண்ணை சரமாரியாக தாக்கியுள்ளார்.இதையடுத்தமனைவியைத்தாக்கிய குற்றத்திற்காக கணவனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருளுடன் மனைவி கைது செய்யப்பட்ட நிலையில் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத கணவன் பொலிஸ் நிலையத்திற்கே சென்று மனைவியைத் தாக்கினாராம். இச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

யாழ் நகரை அண்மித்த ஆனைக் கோட்டைப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுவதாகப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சோதனை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவினர் 80 மில்லி கிராம் போதைப் பொருளுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண்ணை மேலதிக விசாரணைகளுக்காக யாழ் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று அவர்கள் தடுத்து வைத்துள்ளனர். அந்தப் பெண் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நகைக் கடை வர்த்தகரின் மனைவி என விசாரணைகளில் தெரிய வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் மனைவியைப் பார்ப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்கு சென்ற பெண்ணிண் கணவர் “ஏன் இந்த வேலையைச் செய்தாய்?“ எனக் கேட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்தே சரமாரியாக மனைவியைத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நபரை பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாக்கிய குற்றத்திற்காக கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர் என கூறப்படும் மனைவியும் அவரது கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ் மக்களினது மிகப்பெரும் துயரம் கஜேந்திரகுமார் குழு!

## ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.04

தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் கிடைக்கின்ற அல்லது கிடைக்க வருகின்ற சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றுக்கும் குந்தகம் விளைவித்து அதில் சுயலாபம் கண்டுவரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் குழுவினர்தான் தமிழ் மக்களின் மிகப்பெரும் துரோகியாகவும் துயராகவும் இருந்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும், யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் அத்தகைய தமிழ் காங்கிரஸ் குழுவினரை தமிழ் தேசத்தில் இருந்த அகற்றினால்தான் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை நோக்கி பயணிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த ஸ்ரீரங்கேஸ்வரன் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களது இனப் பிரச்சினைக்கு அல்லது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஏதாவது ஒரு சாட்டுப் போக்குக் காட்டி, குந்தகம் ஏற்படுத்தி, தாங்கள் மட்டும்தான் தமிழ் தேசியவாதிகள் என கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் குழுவினர், யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி, அதற்கு பின்னான காலத்திலும், சரி தமது சுயஇலாபங்களை மட்டுமே முதன்மையாக கொண்டு இன்னொரு தரப்பினரது நிகழ்ச்சி நிரலுக்காக ஓலமிட்டு வருகின்றனர்.

இன்று சமஷ்டிதான் தமிழருக்கு வேண்டும் என்று ஊடகங்களில் ஓலமிடும் இவர்கள், தமது கட்சியின் யாப்பில் தமது கொள்கையாக ஒற்றையாட்சியின் கீழ்தான் இலங்கைத் தீவு இருக்கும் என்பதை துல்லியமாக வலியுறுத்தி இருக்கின்றார்கள். இத்தகையவர்கள் தமிழ் மக்களுக்கு இன்று சமஷ்டி முறையிலான தீர்வைக் கோருகின்றனர். அது எந்தப் பொறி முறையில் அமையவேண்டும் என்பதை அவர்கள் தெளிவுபடுத்துவார்களா?

இதேவேளை அன்று மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையை அன்றைய ஆட்சியாளர்கள் பறித்தபோது அதற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பேரன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் மற்றும் அதே கட்சியை சேர்ந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் வி. குமாரசுவாமி ஆகியோர் வாக்களித்து மலையக தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தனர். அதற்கு கைமாறாக அன்றைய ஆட்சியில் கைத்தொழில் அமைச்சை




ஜீ.ஜீ.பொன்னம்பலமும் இராஜாங்க அமைச்சை குமாரசுவாமியும் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் துரோகத்தைச் செய்தனர்.

தற்போது கூட ஒற்றையாட்சிக்கு கீழ் நாடாளுமன்ற உறுப்பினராகவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களில் முதல்வராகவும் தவிசாளர்களாகவும் உறுப்பினர்களாகவும் உறுதிப்பிரமாணம் செய்து அங்கம். வகித்துக்கொண்டு பின்னர் 13 ஆவது திருத்தத்தை தென்னிலங்கை இனவாதக்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக அவர்களுடன் இணைந்து எதிரக்கின்றார் எனக் கூறி, மக்களை அடிமுட்டாளாக்கின்ற இழிவான அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் கஜேந்திரமாரது குழுவினர்தான் தமிழ் தேசத்தின் மாபெரும் துரோகிகள் என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் சுயநலத்துக்காக யாருடன் ஒட்டி விட வாடவில்லை. எமது தேவைகளுக்காக எவரிடமும் மண்டியிடப் போவதுமில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக மட்டுமே தென்னிலங்கையை அரசுடன் நாம் அரசியல் இணைக்கப்பாட்டை ஏற்படுத்தி வருகின்றோம்.

எமது அரசியல் நிலைப்பாடு தான் சரி என்பதை இன்று கஜேந்திரகுமாரே ஏற்றுக்கொண்டுள்ளார். சமஷ்டி என்பது "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்பதற்குள்-தான் பிணைந்துள்ளது. இதைத்தான் கஜேந்தரகுமார் குழுவினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் "கஜேந்திரகுமாருக்கு மட்டும் தான் சமஷ்டி சொந்தமல்ல, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மக்கள் ஆணை உள்ளது." எனத் தெளிவாக எடுத்துரைத்திருந்தார்.

இதனைப் பொறுத்தக்கொள்ள முடியாத கஜேந்திரகுமார் குழு எம் மீது வழமைபோன்று அவதூறுகளையும் சேறுபூசல்களையும் மேற்கொள்ள முனைந்தள்ளது.

அந்தவகையில் தமிழ் மக்களுக்கு அன்றுதொடக்கம்இன்றுவரைமாபெரும் துரோகத்தைச் செய்து வரும் கஜேந்திரகுமார்குழுயதார்த்தத்தைப்புரிந்துகொள்ள வேண்டும். - என்றும் தெரிவித்திருந்தார்.

---

### இஸ்லாமிய அமைப்புக்கள் மீதான

# தடை நீக்கம் குறித்து மீள ஆராயமாட்டோம்

## கண்காணிப்புத் தொடருமாம் பாதுகாப்பு அமைச்சு உறுதி



ஐந்து இஸ்லாமிய அமைப்புக்களின் தடை நீக்கம் குறித்து மீள ஆராயப்போவதில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தொடர்ந்து ஐந்து இஸ்லாமிய அமைப்புக்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார். எனினும், கத்தோலிக்க திருச்சபை அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதனைக் கண்டித்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் தடை நீக்கப்பட்டமை குறித்து அரசு மீள்பரிசீலனை செய்யுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தற்போதைக்கு இது குறித்து மீள்பரிசீலனை செய்யும் திட்டம் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார்.

புலனாய்வுப் பிரிவினரும் பாதுகாப்புடன் தொடர்புபட்டவர்களும் இணைந்து தடைகளை நீக்கும் முடிவை எடுத்தனர் என்று தெரிவித்த அவர், "விமர்சனங்கள் உள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். எனினும், இதனைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே தடையை நீக்கியுள்ளோம். அரசியல்வாதிகள் எவரும் இதில் தொடர்புபடவில்லை - என்று குறிப்பிட்டார்.

இது குறித்து நாங்கள் மீள்பரிசீலனை செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

எனினும், தடை நீக்கப்பட்ட அமைப்புக்களின் நடவடிக்கைகளை உரிய தரப்புக்கள் தொடர்ந்தும் கண்காணிக்கும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

"கண்காணிப்பு தொடரும். அவர்கள் பிழை செய்தால் தடை மீண்டும் நடைமுறைக்கு வரும்" - என்றும் அவர் மேலும் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.08.2023

## மேஷம்

இன்று மிகவும் ஆக்கபூர்வமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் நல்ல பலனைப் பெற்றுத் தரும். இன்று நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியான மன நிலையுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். பணிகளை தக்க நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உறவின் நல்லிணக்கம் காரணமாக உங்கள் துணையும் மகிழ்ச்சி காண்பார்.

பணப் புழக்கம் மகிழ்ச்சிகரமாக காணப்படும். உங்கள் தேவையை விட அதிகமாக காணப்படும். உபரிப் பணம் சேமிக்க உதவும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படுவதால் உங்கள் ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.

## ரிஷபம்

அறிவார்ந்த திட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறையான அணுகுமுறை மூலம் நற் பலன்களை காணலாம். கவனமுடன் பேசுவதால் சாதகமான பலன்கள் கிட்டும். அறிவு பூர்வமாகச் சிந்திப்பதில் கவனம் செலுத்துங்கள்.

உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்களின் நேர்மையான முயற்சிகளுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவைப் போக்கில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை சாதகமாக காணப்படும். சிறிய வகை கடன் மூலம் உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.

## மிதுனம்

நகைச்சுவை அணுகுமுறை மேற் கொள்வதன் மூலம் இன்றைய நாள் இனிமையாக இருக்கும். இதன் மூலம் பிரச்சினைகளை எளிதாகக் கையாளலாம். பிரார்த்தனை மற்றும் வழிபாடு நற்பலன்களை பெற்றுத் தரும்.

பணியிடத்தில் திறமையாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம். இந்த அணுகு முறையின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

சகஜமான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். அனைத்து விதத்திலும் மகிழ்ச்சி காணப்படும்.

பணம் கொடுக்கல் வாங்கல் மற்றும் பங்கு வர்த்தகத்துக்கு இது சாதகமான நேரம். இதன் மூலம் பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

## கடகம்

இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். இதனை உண்மையாக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். முன் கூட்டி திட்டமிடுவதால் நன்மை விளையும்.

நீங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை ஆற்றும்போது கவனம் தேவை.

பதட்டமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடனான நல்லிணக்கம் பாதிக்கப்படும். இத்தகைய எதிர் மறை உணர்வை தவிர்த்து மகிழ்ச்சியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அதிகரிக்கும் செலவுகளால் கவலை ஏற்படும். பணத்தை சிக்கனமாகவும் விவேகத்துடனும் கையாள்வது உதவிகரமாக இருக்கும்.

## சிம்மம்

நீங்கள் இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். என்றாலும் உங்கள் வழக்கமான பணிகளை நீங்கள் கவனமாக செய்ய வேண்டியது அவசியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நேரம் அல்ல.

தடைகள் மற்றும் ஏமாற்றங்கள் காரணமாக பணியில் உங்கள் திறமை பாதிக்கப்படும். சக பணியாளர்களுடன் சில பிரச்சினைகள் காணப்படும்.

சூடான வாக்குவாதங்கள் காரணமாக உங்கள் துணையுடனான நல்லிணக்கம் பாதிக்கப்படும். தேவையற்ற போக்குகளை விடுத்து மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

தேவையற்ற செலவுகளால் பிரச்சினை ஏற்படும். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று நல்ல ஆரோக்கியத்தைப் பராமாரிப்பது சிறிது கடினமாக இருக்கும். முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

உங்கள் தன்னம்பிக்கை காரணமாக நீங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். அதிக முயற்சியின்றி உங்கள் செயல்களை மேற் கொள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவது கண்டு மகிழ்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை விரைவாகவும் திறமையாகவும் முடிப்பீர்கள்.

பயணம் மேற்கொள்வதன் மூலம் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் திருப்தி கிடைக்கும். இந்த சிறந்த தருணங்களால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

## துலாம்

இன்று அவ்வளவு சிறப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணம் மேற் கொள்ள வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று அதிகப்படியான பணிகள் கானபட்டும். பணியில் அதிக பொறுப்புகளை எற்றுக் கொள்ள வேண்டிய சூழலுக்கு வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் அமைதியின்மை உணர்வு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள்.சிறந்த பலன்கள் காண அத்தகைய உணர்வை தவிர்த்திடுங்கள்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும்.

பதட்டம் காரணமாக இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## விருச்சிகம்

இன்று உங்களை நீங்கள் உற்சாகத்துடன் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த எதிர்பார்ப்புமின்றிச் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமற்றதாக காணப்படும். சில அசௌகரியங்கள் காணப்படும். அதிக பணிகள் காணப் படும்.

உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.உணர்ச்சிவசப்படாமல் இருப்பதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்தலாம்.

வீட்டு புனரமைப்பு வேலை காரணமாக செலவுகள் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தோல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.08.2023




இன்றைய நாளில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த மன நிலையுடன் காணப்படுவீர்கள்.

நீங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்களின் நகைச்சுவை நிறைந்த வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்சிகரமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். நேர்மறை எண்ணம் உங்கள் நலுனுக்கும் ஆரோக்கியததுக்கும் உதவிகரமாக இருக்கும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மன ஆறுதலை அளிக்கும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் வளர்ச்சி கவலை அளிப்பதாக இருக்கும். இலக்குகளில் கவனம் செலுத்துவதன் மூலம் வெற்றி பெற இயலும்.

அமைதியை மேற்கொண்டு உங்கள் துணையுடன் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். இந்த அணுகுமுறையை மேற்கொள்வதன் மூலம் உறவில் அமைதியை பராமரிக்க இயலும்.

கூடுதல் செலவுகள் காணப்படலாம். சேமிப்பதற்கான ஆற்றல் பெறுவதும் கடினமாக இருக்கும்.

இன்று கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி சிறந்த பலனை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி பெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

கவனமுடன் பணியாற்றினால் மட்டுமே சிறப்பாக பணியாற்ற இயலும். முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வேறுபட்டு நடந்து கொண்டால் புரிந்துணர்வு வளர்க்க இயலாது. இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதி விஷயத்தில் பலன்கள் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனையின் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்க தியானம் மேற்கொள்ளவும்.




இன்று ஓரளவு பலன் கிடைக்கும் நாள். இசை கேட்பது தொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்வது போன்றவற்றின் மூலம் ஆறுதல் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாடும் மன அமைதியை பெற்றுத் தரும்.

பணியிடத்தில் திருப்தி குறைந்து காணப்படும். கொடுக்கப்பட்ட பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள திட்டமிட்டு செயற்பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். நல்ல புரிந்துணர்வு ஏற்பட இந்த உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. கையில் குறைந்த அளவு பணமே காணப்படும். அது உங்கள் தேவைக்கு போதுமானதாக இருக்காது.

இன்று தலைவலி மற்றும் வயிற்று உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

